முதல்வர் விஜய்யின் நாற்காலியின் நான்கு கால்களும் ஊழல் கால்கள்தான்!

இ.பரந்தாமன் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, மதி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, அவரது மகன் துரை வைகோ ஆகிய 4 பேரும் கூட்டுசதி செய்தவர்கள்.

எங்களை ராஜினாமா செய்ய சொல்லி வற்புறுத்தினார்கள். குதிரை பேரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ராஜினாமா செய்ய சொல்லி திரும்பவும் தேர்தலில் நிற்க வற்புறுத்தினார்கள். எனவே, இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பகிரங்கமாக 2 எம்.எல்.ஏ.க்கள் புகார் கொடுத்து சந்தித்து பேசுகிறார்கள். இந்த 2 எம்.எல்.ஏ.க்களும் ராஜினாமா பண்ண சொல்லி நாங்களே பார்த்து கொள்கிறோம். இவங்களை ஜெயிக்க வைக்கிறோம். இவர்களை தேவையான அளவுக்கு பார்த்து கொள்கிறோம். அப்படி என்று முதல்வர் சொல்ல சொன்னார் என்று கடந்த ஜூன் 16ம் தேதி ஆதவ் அர்ஜுனா வைகோவிடம் சொல்லியிருக்கிறார். 17ம் தேதி முதல்வரை வைகோ சந்திக்கிறார். சந்திக்கின்ற இடம் தலைமை செயலகம் தான். இருந்தாலும் அது அரசியல் ரீதியான சந்திப்பாகதான் அது நடந்து இருக்கிறது. ஆனால் அரசின் சார்பில் மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று செய்தி குறிப்பில் வந்துள்ளது.

அங்கு முதல்வர் வைகோவிடம் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேரையும் ராஜினாமா செய்ய சொல்லுங்கள். நான் பார்த்து கொள்கிறேன். ஜெயிக்க வைக்க வேண்டிய பொறுப்பு என் பொறுப்பு என்று சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டு எம்.எல்.ஏ.க்களும் லஞ்ச ஒழிப்புத் துறையிடம் புகார்!

இதை பேசி முடித்த வைகோ, ஜூன் 17ம் தேதி வைகோ 2 எம்.எல்.ஏ.க்களை வீட்டிற்கு கூப்பிடுகிறார்கள். முதல்வரை நான் பார்த்தேன் உங்கள் 2 பேரையும் ராஜினாமா செய்ய சொல்கிறார். 2 தொகுதி இடைத்தேர்தல் கொண்டுவந்து விடலாம். கொண்டு வந்த பின்னர் அந்த தொகுதிக்கான தேர்தல் செலவை அவரே பார்த்து கொள்கிறேன் என்று சொல்கிறார். அதில் 2 பேரில் ஒருவருக்கு அமைச்சர் பதவியை கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இதை இரண்டு பேரும் மறுத்துள்ளார்கள் இதற்கு 2 பேரும் ஒத்துக் கொள்ளவில்லை. இதற்கு வைகோ சொன்ன வார்த்தை கொத்தடிமைகளாக இருக்கனும் என்று பார்க்கிறீர்களா? நான் சொன்னா நீங்கள் கேட்க மாட்டிங்களா?. ஏன் முரண்டுபிடிக்கிறீக என்று சொல்லியிருக்கிறார். லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகளை நாங்கள் கேட்டு கொள்வது கடந்த 1ம் தேதி புகார் கொடுத்து இருக்கிறார்கள். அதை உடனடியாக பதிவு செய்ய வேண்டும். ஆளுநரிடம் அனுமதி வாங்கி பிரிவு 7, 7ஏ 8, 15 பிரிவன்சன் ஆப்கரப்சன் ஆக்டில், தண்டனை சட்டங்களும் வரும்.

இப்போ முதல்வர் விஜய் யோட நோக்கம், வெளிக்கட்சியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, இடைத் தேர்தலில் கொண்டு வந்து தனக்கு ஒரு தனிப்பட்ட பலத்தை கொண்டு சேர்த்துக் கணும் என்பது தான். இதிலிருந்து நாங்க கேட்கிறதும், மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய விஷயமும் என்ன வென்றால். "நான் ஆட்சிக்கு வந்த உடனே லஞ்ச லாவண்யத்தை, ஊழலை நான் ஒழிச்சிட்டேன்" அப்படின்னு தம் பட்டம் அடிச்சிக்கிறாங்க. ஆனா இந்த அரசாங்கமே ஊழலில் தான் நடக்குது, நிக்குது. வாக்காளர்களுக்கு பணம் கொடுகிறாங்க அரசியல் கட்சிகள் எல்லாம்" அப்படின்னு சொல்லி தவெக பரப்புரை செய்றாங்க, பேசறாங்க. பெரிய புண்ணியவான் மாதிரி பேசுறாங்க. ஆனா வாக்காளர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கிறாங்கன்னு சொல்லி எதிர்க்கட்சிகளை குற்றம் சாட்டுவது ஒரு பக்கம். ஆனா வாக்காளர்களிடமிருந்து வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினரை அப்படியே கொத்தா எடுக்குறாங்க. நீங்க 10 பேர் கிட்ட போய் பெற்று வர்றதும் ஒன்னு தான். அந்த ஒரே ஆளை தூக்கிட்டு வர்றதும் ஒன்னுதான் என்னும் போது, நீங்க மற்ற கட்சி வாக்காளருக்கு பணம் கொடுக்குறாங்கன்னு சொல்லி குற்றம் சுமத்துவது எப்படி சரி? நீங்க எப்படி பார்க்கிறீங்களோ, அதேதான் எம்.எல்.ஏ-வை நீங்க பர்சேஸ் செய்வதும். இதுக்கும் அதுக்கும் என்ன பெரிய வித்தியாசம்?

நீங்கள் தூய சக்தியா!

நீங்க வந்து தூய சக்தியா? இந்த கேள்வி நாட்டு மக்கள் மத்தியிலும் ரொம்ப இருக்கு, புறையோடி போயிருக்கு. இன்றைக்கு வந்து அடித்தட்டு மக்கள் கூட இந்த கேள்வியை கேட்டுட்டு இருக்காங்க. இன்னைக்கு முதல்வர் விஜயுடைய முதல் வர் நாற்காலி என்பது, நாற் காலியின் நான்கு கால்களும் ஊழல் கால்கள்தான். உத்தமர் போல் வேடம் போடுகிறார் முதல்வர். ஊழலை ஒழித்து விட்டேன் என்று தம் பட்டம் அடித்துக்கொள்கிற விஜய், ஆதவ் அர்ஜுனா, அந்த ஆட்சியாளர்கள் எல்லோருமே வந்து இன்றைக்கு வேறு கட்சியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினரை விலைக்கு வாங்கித்தான் ஆட்சியை தக்க வைக்கிறதுக்கும், இடைத்தேர்தலை கொண்டு வர்றதுக்கும் ஒரு முயற்சியை மேற்கொண்டு வருகிறார்கள். அதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு எல்லாமே எதிர்கொண்டிருக்கிறோம் என்பது இந்த புகார் மூலமாக வெளிப்படையாக இருக்கிறது.

சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்!

இதுக்கு முன் டி.டி.வி.தினகரன் ஒரு கம்ப்ளைன்ட் கொடுத்திருக்காங்க, அதை ரிஜிஸ்டர் செய்யலே. அ.தி.மு.க. கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கு, அதை ரிஜிஸ்டர் செய்யலே. இப்படி சம்பந்தப்பட்ட இந்த சப்ஜெக்ட்டுக்கு நேரடி தரப்பினர்களான இந்த 2 சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாக போய் கம்ப்ளைன்ட் கொடுத்திருக்காங்க.

விஜிலென்ஸ் வந்து இந்த ஆட்சியாளர்கள் கையில் இருக்கிறது. அப்படி இருக்கும்போது இவங்க வந்து ஒழுங்கான முறையில் கேஸை ரிஜிஸ்டர் பண்ணுவாங்களான்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. அதனால தான் நாங்க வந்து ரிட்டன் கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கோம். இதைவந்து உடனடியாக ரிஜிஸ்டர் பண்ணி விசாரிக்கவில்லை என்றால், தி.மு.க.வினுடைய சட்டத்துறை இதை சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு மேற்கொள்வதற்கு தயாராக இருக்கிறது. அதனால் லஞ்ச ஒழிப்புத் துறை உடனடியாக ஆளுநரிடம் கேட்டு உடனடியாக இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் தி.மு.க. சட்டப்படி போராட்டம் எடுக்கும். நாட்டு மக்களுடைய வரிப்பணம் வீணாகக் கூடாது. இது மாதிரியான ஒரு குறிப்பிட்ட, ஒரு தனிப்பட்டவருடைய லாபத்திற்காக, அரசியல் சுயலாபத்திற்காக, தீய நோக்கத்திற்காக இப்படி மக்களுடைய வரிப்பணத்தில் தேர்தல் முடிந்த உடனுக்குடன் ராஜினாமா செய்யப்பட்டு இடைத்தேர்தலுக்கு கொண்டுவருது என்பது நாட்டுக்கு நல்லதல்ல. ஜனநாயகத்தை இவங்க ஒரு கேலிக் கூத்தாக்குறாங்க.

இவ்வாறு அவர் கூறினார்.



அரியலூர் மாவட்டம் செந்துறையில் செப்டிக் டேங்க் சுண்ணாம்பு கலவை பிரித்தபோது மூவர் உயிரிழந்தனர் அவர்களுக்கு நிவாரணம் கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்ற அந்த குடும்பத்தினர் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகளை போலிசார் தடுத்து நிறுத்தினர், மீறி உள்ளே சென்றவர்களை காவல்துறையினர் பெண்களை கை, கால்களை பிடித்து தூக்கி சென்று கைது செய்தனர், இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! சுதா தீனதயாளன் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் முப்பெரும் விழா!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி – எம்.எம்.அப்துல்லா சிறப்புரை!

சென்னை, அக்.7-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் முப்பெரும் விழா சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் இன்று (07-10-2026 புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட் ஆசாத், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், புனிதவதி எத்திராஜன், டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, சரிதா மகேஷ்குமார், சாவித்திரி வீரராகவன், டாக்டர். ஜி.சாந்தகுமாரி, எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், நா.ரஞ்சித் விஜயாலயன், பி.விஜய குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், வெ.பரிமளம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, மா.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ். சந்தியாகு, வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், டி.ஸதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், ஆ.நா.பார்த்திபன், கே.கவியரசு, எல்.சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி..கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராம்மூர்த்தி, பா.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்த முப்பெரும் விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றி அழகன், ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், பி. கே.மூர்த்தி, எம்.விஜயகுமார், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்தன், பரிதி இளம்சுருதி, ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராஜன், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே. வாசு, ஐசிஎப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி..ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, சொ. வேலு, வி.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ.மணி, பி.உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், அ.நிர்மலா தேவி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ.பாலமுருகன், ஜி.ஜே. பிரபு, கே. வினோத், எஸ்.தனசேகர், எல்பிஎஃப்.மோகன், ஜி. தாமோதரன், நா.துலுக்கானம், கு.கிருஷ்ண மூர்த்தி, ஆர்.எஸ்.சித்திக், இரா.வீரமணி, ம.அசோக் குமார், எம்.பெரோஸ்கான், கா. ராஜா முகமது மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடு : சென்னை கிழக்கு மாவட்ட தி,மு,க, மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி

திருவள்ளூர் அடுத்த மேட்டுப்பாளையத்தில்

த.வெ.க. ஆட்சியில் குடிநீருக்காக வீதியில் இறங்கிய மக்கள்!

காலிக்குடங்களுடன் சாலை மறியல் - 'மனு வழங்கியும் எந்தப் பயனும் இல்லை' என பொதுமக்கள் குமுறல்!

திருவள்ளூர் அக். 07-

குடிநீர் வழங்கத் தவறிய த.வெ.க. அரசைக் கண்டித்து, மேட்டுப்பாளையம் மக்கள் காலிக்குடங்களுடன் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். குடிநீருக்காக மக்கள் போராடும் நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அரசு பேருந்துகள் சிறைபிடிக்கப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



திருவள்ளூர் அடுத்த பூண்டி ஒன்றியம், சென்றான்பாளையம் ஊராட்சிக் குட்பட்ட மேட்டுப்பாளையம் கிராமத்தில் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் கடந்த 5 மாதங்களாக குடிநீர் விநியோகம் முறையாக நடைபெறவில்லை என்றும், கடந்த ஒரு வாரமாக குடிநீர் முற்றிலும் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் குற்றம்சாட்டினர்.

குடிநீர் கிடைக்காமல் தவிக்கும் மக்கள், டேங்கர் லாரிகளில் வரும் தண்ணீரை ஒரு குடம் ரூ.10 வரை பணம் கொடுத்து வாங்கிப் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். அன்றாட கூலியை நம்பி வாழும் குடும்பங்கள், தினமும் பணம் கொடுத்து குடிநீர் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது வேதனைக்குரியது என்றும் அவர்கள் கூறினர்.

குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளிடமும், திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் உள்ளிட்டோரிடமும் பல முறை மனுக்கள் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவித்தனர்.

அதிகாரிகளிடம் முறையிட்டும் தீர்வு கிடைக்காததால் வேதனையும் ஆத்திரமும் அடைந்த பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோருடன் காலிக்குடங்களை ஏந்தியபடி திருவள்ளூர்- ராமஞ்சேரி சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் போது அவ்வழியாக வந்த அரசு பேருந்துகளையும் பொது மக்கள் சிறைபிடித்தனர். இதனால் பேருந்துகளில் பயணம் செய்த பொதுமக்கள், வேலைக்குச் சென்ற தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்டனர். குடிநீர் பிரச்சினை காரணமாக பொதுமக்களின் போராட்டம் போக்குவரத்து பாதிக்கும் அளவுக்கு சென்றது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

மேட்டுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில், "பொய்யான வாக்குறுதிகளை நம்பி தற்போதைய த.வெ.க. அரசுக்கு வாக்களித்தோம். ஆனால் இன்று குடிப்பதற்கான தண்ணீரைக்கூட பணம் கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலையில் உள்ளோம். கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் பொது மக்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டு வருகின்றனர். அடிப்படை வசதிகளை செய்து தருவோம் என்ற வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவது இதுவே கடைசியாக இருக்கும்" என்றார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் வரபிரசாத், பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது 10 நாட்களுக்குள் குடிநீர் விநியோகத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

சென்னை எழும்பூரில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடிய

1000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் குண்டுக்கட்டாக கைது! மின்சாரம் துண்டிப்பு!







சென்னை, அக்.7-

எழும்பூரில் 1000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே, தமிழ் நாடு இடைநிலை சுகாதார பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக 1,000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல தங்களுக்கும் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக, சமூக சுகாதார அதிகாரி (Community Health Officer) என்ற பெயரை அதிகாரப் பூர்வமாக வழங்க வேண்டும் என்றும், இப்பெயரையே பணி நியமன ஆணையும் குறிப்பிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல, தமிழகத்திலும் ஊதியம் மற்றும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்."

பிற மாநிலங்களில் சி.எச்.ஓ.க்களுக்கு (CHO) சுமார் 4,000 முதல் 70,000 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, தங்களுக்கும் அதே அளவிலான ஊதியத்தை வழங்க வேண்டும் என்று அவர்கள் தொடர் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் போராடிய செவிலியர்கள் பேச்சுவார்த்தை என அழைத்து செல்லப்பட்டு குண்டுகட்டாக கைது செய்யப்பட்டனர்.